பக்கங்கள்: 08

# காலைக்கதிர்
Kalaikkathir

விழுயல் 09 வள்ளுவர் ஆண்டு 2056 ஐப்பசி 10 திங்கட்கிழமை 27.10.2025 கதிர் 351

## இனி இது ரகசியம் அல்ல!

அண்மையில் தமிழ் அரசியல் கட்சி ஒன்றின் தலைவர் சர்ச்சைக்குரிய விவகாரத்திற்குள் மாட்டிக்கொண்டது குறித்த தகவல்களை எனது வாசர்களுடன் இந்தப் பத்தியில் ☞2

## மாகாணத் தேர்தலை இழுத்தடிக்கவே என்.பி.பி. ஆளும்தரப்பு முற்படக்கூடும்

### சிறிதுங்க ஜயசூரிய எதிர்வுகூறல்

ஆளும் கட்சிக்கான மக்கள் ஆதரவு வீழ்ச்சியடைந்து வருகின்றது. அதனால் மாகாணசபைத்தேர்தலைஇழுத்தடிப்பதற்கே அதுமுற்படக்கூடும்என்றுஐக்கியசோஷலிசக் கட்சியின் பொதுச்செயலாளர் சிறிதுங்க ஜயசூரிய தெரிவித்தார்.

மாகாண சபைத் தேர்தல் உட்பட சமகால அரசியல் நிலவரம் தொடர்பில் செய்தியாளர்களிடம்பேசியபோதுஇதனைத் தெரிவித்தார்.

இலங்கையில் தமிழர்கள் ஏராளமான பிரச்சினைகளுடன் வாழ்ந்து வருகின்றனர். ஆனால், அவர்களுக்கு அவ்வாறான பிரச்சினைகள் இல்லை என்பதைப் போன்றதொரு பிம்பம் கடந்த ஆட்சிகளின காலத்தில் ஏற்படுத்தப்பட்டது. தற்போதும் அவ்வாறான நிலையே தொடர்கின்றது.

தமிழ்த்தேசியக்கட்சிகளுக்கிடையிலான பிளவும் இதற்குப் பிரதான காரணமாக அமைகின்றது. பிளவுகள் இருந்தாலும், தீர்வுக்கான பொது வேலைத்திட்டத்தின் கீழ் தமிழ்க் கட்சிகள் ஒருமித்துச் செயற்படவேண்டும். ஆளும் கட்சிக்கான மக்கள் ஆதரவில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. கூட்டுறவுத் தேர்தல்களில்கூட ஆளும் கட்சிக்குத் தோல்வி ஏற்பட்டு வருகின்றது. எனவே, மாகாண சபைத் தேர்தலை இழுத்தடிப்பதற்கே அதிகாரத் தரப்பு முற்படக்கூடும்.

அதற்கான ஆயுதமாக எல்லை நிர்ணய விடயம் பயன்படுத்தப்படலாம். எனினும், இந்தியா மற்றும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை என்பன தேர்தலை நடத்துமாறு வலியுறுத்துவதால், தேர்தல் நடத்தப்படவும் சாத்தியங்கள் உள்ளன ' என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## ஜகத் எம்.பிக்கான அச்சுறுத்தலுக்கு பாதாள உலகத் தொடர்பே காரணம்

### பொலிஸ் மா அதிபர் விளக்கம்

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் விதானவின் உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதற்குக் காரணம் திட்டமிட்ட குற்றச் செயல்கள் மற்றும் சட்டவிரோதவர்த்தகத்தில்ஈடுபட்டுள்ள நபர்களுடனானஅவரதுதொடர்புகளே என்றும் அரசியல் காரணங்கள் அல்ல என்றும் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்தார்.

அத்தோடு நாடாளுமன்ற உறுப்பினர் விதானவுக்கு தற்காலிகப் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது என்பதையும் பொலிஸ்மாஅதிபர்உறுதிப்படுத்தினார்.

'நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் விதானவின் உயிருக்கு அச்சுறுத்தல் உள்ளது, ஆனால் இது அரசியல் ரீதியாகத் தூண்டப்பட்ட விடயம் அல்ல. பாதாள உலகக் குழுக்களுடனும் சட்டவிரோத நடவடிக்கைகளுடனும் தொடர்புடைய நபர்களுடன் அவருக்கு இருந்த கடந்த கால கொடுக்கல் வாங்கல்களையே இதற்கான காரணமாகப் புலனாய்வு அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன; என்று பொலிஸ் மா அதிபர் தெரிவித்தார். ☞2

## பாதுகாப்பற்ற நிலையில் 17 ஆயிரம் சிறுவர்கள்

மிகவும் பாதுகாப்பற்ற நிலையில் உள்ள 17,000 சிறுவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகக் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

அனைத்து மட்டங்களிலும் உள்ள சிறுவர்கள் அரசால் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர் எனவும், எந்தவொரு சிறுவர்களையும் கைவிடாமல், ஒவ்வொரு சிறுவருக்கும் சமூகப் பாதுகாப்பு ☞2

# லசந்த கொலையாளி உள்ளிட்ட 4 சந்தேகநபர்கள் நேற்றுக் கைது



வெலிகம பிரதேச சபைத் தவிசாளர்லசந்தவிக்ரமசேகரவை சுட்டுக் கொன்றார் என்று சந்தேகிக்கப்படும் நபர் நேற்று மாலைமஹரகமபகுதியில்கைது செய்யப்பட்டார் என்று பொலிஸ் சிறப்பு அதிரடிப் படை (STF) தெரிவித்துள்ளது.

வெலிகம பிரதேச சபைத் ☞2

## கொலைக் கலாசாரம் தலைவிரித்தாடுகிறது ஆளும்தரப்பால் கட்டுப்படுத்த முடியவில்லை

### எதிர்க் கட்சித் தலைவர் சஜித் விளாசல்

மக்கள் ஆதரவில் அதிகாரத்தைக் கைப்பற்றியவர்கள் இன்று சுகபோகங்களை அனுபவித்து வருகின்றனர். கொலை கலாசாரம் முழு நாட்டையும் ஆக்கிரமித்துள்ளது. ஆனால் ஆளும்தரப்பால் அதனை கட்டுப்படுத்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

இரத்தினபுரி - இறக்குவானை பிரதேசத்தில் ☞2

## தவிசாளர்களின் பாதுகாப்பிற்கு சிறப்புப் பாதுகாப்புத் திட்டம்

பிரதேச சபைகள் உட்பட உள்ளூராட்சி நிறுவனங்களின் தவிசாளர்களின் பாதுகாப்பிற்காக ஒரு சிறப்பு பாதுகாப்பு திட்டத்தை செயல்படுத்துவதில் பொலிஸ் மா அதிபர் கவனம் செலுத்தியுள்ளார்.

முதல் கட்டமாக, அச்சுறுத்தலுக்கு உள்ளான உள்ளூராட்சி நிறுவனத் தலைவர்களின் பட்டியல் புலனாய்வு அமைப்புகளிடமிருந்து பெறப்பட்டு வருவதாக பொலிஸ வட்டாரங்கள் அறிந்துள்ளன.

பாதாள உலகத்திடமிருந்து அல்லது வேறு ஏதேனும் குழுவிடமிருந்து ஏதேனும் கொலை அச்சுறுத்தல்கள் அல்லது பிற அச்சுறுத்தல்கள் வந்தால் உடனடியாகத் தெரிவிக்குமாறு உள்ளூர் அரச நிறுவனத் தலைவர்களுக்கும் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

## காத்தான்குடி குளத்தில் மனிதத் தலை

சனிக்கிழமை மாலை காத்தான்குடி 5ஆம் வட்டாரத்தில் உள்ள குளத்தில் 66 வயதுடைய ஒருவரின் மனித தலை மிதப்பது ☞2

## மின்னியல் விசா வழங்குநர்கள் 1.4 மில்லியன் டொலர் வரி ஏய்ப்பு

மின்னியல் வீசா (இ-வீசா) திட்டத்துடன் தொடர்புடைய சேவை வழங்குநர்கள் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குச் செலுத்த வேண்டிய 1.4 மில்லியன் டொலருக்கும் அதிகமான வரிகளைச் செலுத்தத் தவறியுள்ளதாக இ-விசா ஒப்பந்தம் குறித்த விசேட கணக்காய்வு அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

குறித்த அறிக்கைக்கமைய வி.எப்.எஸ். வேல்ட்வைட் ஹோல்டிங்ஸ் (VFS VF Worldwide Holdings Ltd) நிறுவனத்தின் கீழ் இயங்கும் ஜி.பி.எஸ். தொழிநுட்பசேவைகள் ☞2

## 12 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் அலைபேசி பயன்படுத்த தடை

### திட்டமிடுகிறது ஆளும்தரப்பு

பாடசாலை மாணவர்களில் 12 வயதிற்குட்பட்டோர் நவீன அலைபேசிகளை (மொபைல் போஃன்) பயன்படுத்துவதற்குத் தடை விதிக்க திட்டமிட்டுள்ளதாக, சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா தெரிவித்துள்ளார்.

பாடசாலை மாணவர்கள் கலந்துகொண்ட நிகழ்வொன்றில் உரையாற்றிய அமைச்சர், 12 வயதுக்குக் குறைவான எந்தவொரு பிள்ளையும் நவீன அலைபேசிகளை வைத்திருக்கவோ அல்லது ☞2

## இனி இது .....

பகிர்ந்துகொண்டிருந்தேன். 60 வயதுக்கு மேற்பட்ட அந்தத் தலைவர் வளர்த்த 30 வயதுப் 'பச்சைக் கிளி' பறந்து போனது குறித்து சமூக ஊடகங்களில் வெளியான குரல் பதிவுகளை அடுத்து அவரது கட்சிக்குள் அவருக்கு எழுந்துள்ள நெருக்கடிகள் குறித்து எனது பதிவில் தெரிவித்திருந்தேன்.

சுருக்கமாகச் சொன்னால், அந்தத் தமிழ்க் கட்சித் தலைவர் தனது கட்சியில் வளர்ந்து வந்த இளம் பெண் அரசியல்வாதி ஒருவருடன் உறவில் இருந்திருக்கிறார். அந்தப் பெண்ணுக்குத் திருமணமாகிய பின்னரும் அவரைத் தன்னுடனான உறவில் தொடர அவர் வற்புறுத்தினார் என்று அந்தக் குரல் பதிவுகளிலிருந்து தெரியவந்தது. அந்தக் குரல் பதிவுகளையும் அந்தத் தலைவருக்கு நெருக்கமான ஒருவரே வெளியே கசிய விட்டிருந்தார் என்று நம்பப்படுகிறது.

ஒலிப்பதிவுகளைக் கசிய விட்டவருக்கும் தன்னுடன் நெருக்கமான உறவில் இருந்த பெண்ணுக்கும் இடையில் காதல் உறவுகள் இருக்குமோ என்று தலைவருக்கு ஏற்பட்ட சந்தேகம்தான் இந்த விடயங்கள் எல்லாம் சர்ச்சையாக வெடித்துக் கிளம்புவதற்குக் காரணம். தன் மீது தலைவர் கரவு வைத்துவிட்டார் என்பதால் தனது உயிருக்கு ஏதாவது ஆபத்து வந்துவிடுமோ என்று கருதிய அந்த நபர் தலைவருக்கும் தனக்குமான உரையாடல்களைக் கட்சியின் உயர்மட்டத்தினர் பலருக்கும் அனுப்பி நியாயம் கேட்கப்போக அந்தக் குரல் பதிவுகள் வெளியே வந்தன என்று சொல்லப்படுகின்றது.

இந்த நிலையில் அந்தக் குரல் பதிவுகளை வெளியிட்ட சுரேஸ் என்று அழைக்கப்படும் நபர் நேற்று உயிரிழந்திருக்கிறார்கள். நீர்கொழும்பையொட்டியுள்ள அவரது வீட்டில் தூக்கில் தொங்கிய நிலையில் அவரது சடலம் காணப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். சடலம் இப்போது உடற்கூறாய்வுகளுக்காக வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. அவரது உயிரிழப்பு தற்கொலையா அல்லது கொலையா என்பது தொடர்பில் பொலிஸார் தீவிரமான விசாரணையை முன்னெடுத்திருக்கிறார்கள்.

அது எதுவாக இருந்தாலும் கட்சித் தலைவருடன் சர்ச்சைக்குள் சிக்கிக்கொண்ட ஓரிரு வாரங்களுக்குள்ளேயே அவர் உயிரிழந்திருக்கும் நிலையில் அவர் தற்கொலை செய்துகொண்டிருப்பார் என்பதை நம்புவதற்கு கட்சிக்குள்ளேயே எவரும் இல்லை என்பதுதான் உண்மைநிலை. அதனால் எழுந்திருக்கும் கொந்தளிப்பு நிலையால் உள்நாடு, வெளிநாடு என்று அந்தக் கட்சியின் உறுப்பினர்கள் பலரும் நேற்று இரவிரவாக சூம் மற்றும் வட்ஸ் அப் மூலம் தொடர்ந்து கலந்துரையாடி கட்சித் தலைவருக்கு எதிரான நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தி அவரை உடனடியாகக் கட்சிப் பொறுப்புக்களில் இருந்தும் நாடாளுமன்றப் பதவியிலிருந்தும் தூக்கி எறிவது என்று கங்கணங்கட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், அவர்களது முயற்சி எவ்வளவு தூரம் வெற்றியளிக்கும் என்பது எனக்குத் தெரியவில்லை. ஏனெனில் கட்சியின் உப தலைவர் பெண் சர்ச்சைக்குள் சிக்கிக்கொண்ட தலைவரை நேரில் சந்தித்து, பெயர் நாறிப் போய் கட்சியைவிட்டு மற்றவர்களால் கலைக்கப்படுவதற்குமுன் பாகுபதவிகளிலிருந்து குறைந்தபட்சம் உடனடியாக விலகி மானம் மரியாதையைக் காப்பாற்றிக்கொள்ளுமாறு அவரிடம் வலியுறுத்தியிருக்கிறார். ஆனால் தலைவரோ அதற்கு மறுத்துவிட்டார். தான் பதவி விலகுவதென்பது தற்கொலைக்கு ஒப்பானது என்று தெரிவித்திருக்கும் அவர், கட்சியின் செயற்பாடுகளில் தலையிடாமல் தான் ஒதுங்கிக் கொள்கிறார் என்றும் கட்சிக் கூட்டங்களுக்கோ வெளிநாட்டு இராஜதந்திரிகளைச் சந்திப்பதற்கோ தான் வரமாட்டார் என்றும் கட்சியின் உபதலைவரையே அவற்றையெல்லாம் பார்த்துக்கொள்ளுமாறும், தனது நாடாளுமன்றப் பதவிக் காலம் முடிவுக்கு வருவதற்கு இன்னும் 4 ஆண்டுகள் இருக்கும் நிலையில், அதுவரையும் தான் பெயரளவில் கட்சித் தலைவராகத் தொடர்கின்றேன் என்றும் அடுத்த பொதுக் குழுக் கூட்டத்தில் தலைமைப் பதவிக்குப் போட்டியிடாமல் ஒதுங்கிக் கொள்வார் என்றும் திட்டவட்டமாகக் கூறிவிட்டார்.

அதேசமயம், தான் மாட்டிக்கொண்டுள்ள சர்ச்சைக்குள் தெரிவிக்கப்படும் விடயங்கள் உண்மையானவைதான் என்பதையும் அவர் கட்சியின் உபதலைவரிடம் ஏற்றுக்கொண்டுள்ளார். அதற்காக கட்சித் தலைவர் பதவியிலிருந்து விலகி தனது மதிப்பைக் கெடுத்துக்கொள்ள முடியாது என்பது அவரது நியாயம். அவரது இந்தத் திமிரும் தெனவெட்டும் உப தலைவரை அதிர்ச்சியடைய வைத்துள்ளன. கட்சியின் மரியாதையையும் தலைவரின் மரியாதையையும் காப்பாற்றிக்கொண்டு கட்சியைப் பாதுகாக்க அவர் எடுத்த முயற்சி வீணாகிப் போனது. இதற்கு கட்சியின் செயலாளர் மற்றும் பொருளாளர்கள் உள்ளிட்ட ஒரு சிலர் தலைவருக்குப் பக்கபலமாக இருப்பதும், அவருக்கு ஆதரவாக கட்சியின் அரசியல் குழுவையோ பொதுக் குழுவையோ கூட்ட மறுப்பதுமே காரணம் என்றும் கூறப்படுகின்றது. கட்சியின் பொதுக் குழுவைக் கூட்டும்படி தலைமைக் குழு உறுப்பினர் ஒருவர் வட்ஸ்அப்பில் அவசரமாக அனுப்பிய கோரிக்கையை, அது உத்தியோகபூர்வக் கோரிக்கை அல்ல, அவர்களின் ஆட்டத்திற்கெல்லாம் ஆடமுடியாது நீதான் தொடர்ந்தும் தலைவர் எனசெயலாளர் கட்சித் தலைவருக்குக் கொம்பு சீவி விட்டிருக்கின்றார் என்றும் கேள்வி. அதேநேரம் கட்சியின் மத்திய குழு மற்றும் தலைமைக் குழுக் கூட்ட அழைப்புக்கள் வட்ஸ்அப் வழியாகவே அனுப்பப்படுகின்றன என்பதையும் தலைமைக் குழுக் கூட்டங்கள் பெரும்பாலும் சூம் மூலமே நடத்தப்படுகின்றன என்பதையும் சுட்டிக்காட்டும் கட்சியினர், பொதுக்குழுவைக் கூட்டும்படி கேட்டால் மட்டும் செயலாளர் உத்தியோகபூர்வமாக எழுத்தில் கடிதம் கேட்பதையும் நக்கலடிக்கிறார்கள். இப்படி கட்சியின் முக்கிய பதவியில் உள்ளவர்கள் தலைவரின் மோசமான பக்கங்களை மூடி மறைத்து அவரைப் பதவியில் வைத்துத் அதன் மூலம் தாமும் குளிர்காய முயற்சிப்பதால் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் பலரும் கடும் சீற்றமடைந்துள்ளனர்.

இதனால் அடுத்ததாகக் கட்சியின் தலைமைக் குழு மற்றும் பொதுக் குழு உறுப்பினர்கள் 6 பேரடங்கிய குழு ஒன்றைத் தலைவரிடம் அனுப்பி அவரை உடனடியாகப் பதவி விலகக் கோருவது என்றும் அதேநேரம் மத்திய குழு உறுப்பினர்களிடம் கையெழுத்துப் பெற்று மத்திய குழுவை உடனடியாகக் கூட்டும்படி கட்சியின் செயலாளரிடம் கோரிக்கை முன்வைப்பது என்றும் அதற்கும் செயலாளர் மறுத்தால் பொதுக் குழுவைக் கூட்ட உத்தரவிடும்படி கேட்டு நீதிமன்றத்தை நாடுவது என்றும் கட்சித் தலைவர்கள் பலரும் கூடிப் பேசி முடிவெடுத்திருந்தனர்.

அதற்கிடையில் நேற்று சுரேஸின் இறப்பு நிகழ்ந்திருப்பதை அடுத்து தலைவர் மீது சந்தேகப் பார்வை திரும்பியிருப்பதன் காரணமாக, இனியும் தாமதிக்க முடியாது தலைவரை உடனடியாகப் பதவிநீக்கவேண்டும் என்கிற கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது. இது தொடர்பிலேயே நேற்றுப் பலரும் கூடிக் கூடிப் பேசிக் கொண்டிருந்தனர். நள்ளிரவு தாண்டியும் இந்தப் பேச்சுக்கள் தொடர்ந்ததால், அதன் முடிவுகள் என்ன என்பதை பின்னர் விரிவாகச் சொல்கின்றேன்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## லசந்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவரின் கொலை தொடர்பாக நேற்றுக் காலை -கெக்கிராவப் பகுதியில் ஒரு பெண் உள்ளிட்ட மூன்று பேர் கைது செய்யப்பட்டனர். இவர்கள் கைது செய்யப்படும்போது அங்கிருந்தவர்கள் பொலிஸாருடன் கைகலப்பில் ஈடுபட்டனர். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு லசந்த மீது துப்பாக்கிச் சூடு நடத்தினார் என்று சந்தேகிக்கப்படும் நபர் அங்கிருந்து தப்பியோடியிருந்தார்.

இருப்பினும், பல பொலிஸ் குழுக்கள் நடத்திய விசாரணைகளின்போது, சந்தேகநபர் சில மணி நேரங்களுக்குள் மஹாரகம பகுதியில் உள்ள ஒரு பிரபலமான துணிக்கடைக்கு அருகில் பொலிஸ் சிறப்பு அதிரடிப் படையின் களுபோவில முகாமைச் சேர்ந்த அதிகாரிகள் குழுவால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் காலி, இமதுவவில் உள்ள அங்குலு கஹா பகுதியைச் சேர்ந்த 34 வயதுடையவர். அவர் மேலதிக விசாரணைகளுக்காகக் குற்றப்புலனாய்வுத்துறையின் நிதிக் குற்றப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக காவல்துறை ஊடகப் பேச்சாளர் உதவி காவல்துறை கண்காணிப்பாளர் உதய குமார வுட்லர் தெரிவித்தார்.

முன்னதாக, வெலிகம பிரதேச சபையின் தவிசாளர் லசந்த விக்ரமசேகர கொலைச் சம்பவம் தொடர்பில் அநுராதபுரம் மாவட்டம் கெக்கிராவயில் பெண் உள்ளிட்ட 3 சந்தேகநபர்கள் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களம், நிதிக்குற்ற விசாரணைப் பிரிவு, பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மற்றும் இராணுவத்தினர் இணைந்து முன்னெடுத்த சுற்றிவளைப்பில் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நிதிக்குற்ற விசாரணைப் பிரிவினால் இந்தச் சுற்றிவளைப்புதிட்டமிடப்பட்டபின்னர் கெக்கிராவ 50 வீட்டுத்திட்ட பகுதியில் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் தலைமறைவாகியிருக்கின்றனர் என்று தகவல் கிடைத்துள்ளது.

நேற்று அதிகாலை கைவிடப்பட்ட வீடொன்று சுற்றிவளைக்கப்பட்டு சந்தேகநபர்கள் இருவர் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். குறித்த இருவரும் கைது செய்யப்படும் வேளையில் அங்கிருந்த சிலர் பொலிஸாருடன் கைகலப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இதன்போது காயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர் சிகிச்சைகளுக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்களிடமிருந்து குற்றச்செயலுக்கு பயன்படுத்திய மோட்டார் சைக்கிள் மற்றும் 1,265,000 ரூபா பணம் என்பன பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

ஹெரோயின், ஐஸ் போதைப்பொருள்கள் மற்றும் போதைப்பொருள் பாவனைக்குப் பயன்படுத்தப்படும் உபகரணங்கள் என்பனவும் அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்களுக்கு தங்குமிட வசதிகளை வழங்கிய குறித்த பகுதியைச் சேர்ந்த மற்றுமொருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருடன் கைகலப்பு ஈடுபட்ட சந்தர்ப்பத்தில் தப்பிச்சென்ற மற்றொரு முக்கிய சந்தேகநபரைக் கைது செய்வதற்கு பொலிஸார் பொதுமக்களின் உதவியை நாடியுள்ளனர்.

வெலிகம பிரதேச சபையின் தவிசாளர் லசந்த விக்ரமசேகர ஒக்டோபர் 22 சுட்டுக்கொலை செய்யப்பட்டார்.

## கொலைக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சனிக்கிழமை இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோது இதனைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவித்ததாவது:

மக்கள் ஆதரவில் அதிகாரத்தைக் கைப்பற்றியவர்கள் இன்று சுகபோகங்களை அனுபவித்து வருகின்றனர். கொலைக் கலாசாரம் முழு நாட்டையும் ஆக்கிரமித்துள்ளது. பிரதேச சபைத் தவிசாளர்களால் பொது மக்கள் தினத்தை கொண்டு நடத்தவோ, நீதிமன்றத்தில் வழக்குகளை விசாரிக்கவோ முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

மனித உரிமை மீறல்கள் எல்லா இடங்களிலும் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன. அரசாங்கத்தின் இயலாமையால் இந்நடவடிக்கைகளைத் தடுக்க முடியாதுள்ளது. காட்டுச் சட்டம் கோலோச்சி, பாதாள உலகக் கும்பல்கள் நாட்டை ஆளும் சூழலை இந்த அரசாங்கம் உருவாக்கியுள்ளது.

ஆங்கில மொழியாற்றல் தொடர்பில் நான் முன்னர் பேசியபோது என்னை கேலி செய்தனர். ஆனால் இன்று சர்வதேச மாநாடுகளுக்குச் சென்று ஆங்கில மொழியில் பேசத் தெரியாமல் தடுமாற்றமடைகின்றனர். நாட்டின் கல்வி முறைமை நவீனமயமாக்கப்பட வேண்டும். உலக நாடுகளுடன் சகல துறைகளிலும் போட்டியிடுவதற்கான அறிவையும் நுட்பத்தையும் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்றார்.

## பாதுகாப்பற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்க ஆளும்தரப்பு நடவடிக்கை எடுக்கும் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

அரசுத் தலைவர் நிதியத்தின் மூலம் செயல்படுத்தப்படும் உயர் கல்வியில் சிறந்த மாணவர்களைப் பாராட்டும் வடமேல் மாகாண நிகழ்ச்சித் திட்டத்தில் கலந்துகொண்டு, நேற்று உரையாற்றும் போதே பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

நாட்டின் எதிர்கால சந்ததியினருக்காக வாழத் தகுதியானஒருநாட்டை உருவாக்க அரசுத்தலைவர் தலைமையிலான தற்போதைய ஆளும்தரப்பு உறுதிபூண்டுள்ளது என்றும் கூறினார்.

## ஜகத் எம்.பிக்கான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனது வாகனத்தில் இருந்து இறங்கும்போது தன்னைக் குறிவைத்து ஒரு கொலைத் திட்டம் தீட்டப்பட்டுள்ளதாகப் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளது என்று ஜகத் விதான நாடாளுமன்றத்தில் கூறியிருந்தார். இதனால் தனக்குப் பாதுகாப்பு வழங்கப்படவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்திருந்தார். அவரது கோரிக்கையைத் தொடர்ந்து, அவருக்கு பாதுகாப்புக்காக இரண்டு பொலிஸார் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அச்சுறுத்தலின் மூலத்தை உறுதிப்படுத்தவும் சம்பந்தப்பட்ட நபர்களை அடையாளம் காணவும் மேலதிக விசாரணை நடைபெற்று வருவதாகப் பொலிஸ் மா அதிபர் மேலும் தெரிவித்தார்.

## மின்னியல் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் ஐ.வி.எஸ். க்ளோபல் நிறுவனமானது, 2024 ஏப்ரல் - ஒகஸ்ட்டுக்கு இடையில் விசா விண்ணப்பதாரர்களிடமிருந்து 2.5 சதவீத சமூகப் பாதுகாப்புப் பங்களிப்பு வரி (நீரீளீலி) மற்றும் 18 சதவீத பெறுமதி சேர் வரி (ஙுவீ) ஆகிய இரண்டையும் சேகரித்துள்ளது.

இந்தத் தொகைகள் சமூகப் பாதுகாப்புப் பங்களிப்பு வரியில் சுமார் 172,970 டொலர்களாகவும், பெறுமதி சேர் வரியில் 1,245,390 டொலர்களாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துக்கு இந்த வரி செலுத்தப்படாமையால் ஆளும்தரப்புக்கு மொத்த வரி இழப்பு 1,418,360 டொலர்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்தக் காலகட்டத்தில் நிறுவனங்கள் 373,991 விசா விண்ணப்பங்களைக் கையாண்டுள்ளன என்றும், குறைந்தபட்சம் 6.9 மில்லியன் டொலர் சேவைக் கட்டணவருவாயை ஈட்டியுள்ளன என்றும் அறிக்கை குறிப்பிடுகிறது. மேலும், சுற்றுலாப் பயணிகளுக்கு விசா கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டிருந்தாலும், அவர்களுக்குச் சேவை கட்டணங்கள் விதிக்கப்பட்ட விசா கட்டண விலக்கு நாடுகளிலிருந்து இந்த நிறுவனங்கள் மேலதிகமாக 1.8 மில்லியன் டொலர்களை ஈட்டியுள்ளன. இது முந்தைய இலத்திரனியல் பயண அனுமதி (சிவீபு) முறைமையின் கீழ் உருவாக்கப்பட்டிருக்காத வருமானம் ஆகும்.

திணைக்களத்தால் அறவிடப்படும் விசா கட்டணத்துடன் மேலதிகமாக, புதிய முறைமையின் கீழ் விசா விண்ணப்பதாரர்கள் அனைவரும் விலக்குக்குத் தகுதியானவர்கள் உட்பட 18.50 டொலர் சேவை கட்டணம் செலுத்த வேண்டியிருந்தது என்று கணக்காய்வு அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

வரிசெலுத்தத்தவறியமை, விசேடகணக்காய்வு அறிக்கையில் அடையாளம் காணப்பட்ட பல முறைகேடுகளில் ஒன்றாகும். இது இ-விசா திட்டத்தை வழங்குவதிலும் அமுல்படுத்துவதிலும் ஏற்பட்ட பெரும் நடைமுறைத் தவறுகள், வருவாய் இழப்புகள் மற்றும் வெளிப்படைத்தன்மை இல்லாமை ஆகியவற்றைக் குறிப்பிடுவதாக அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 12 வயதுக்குட்பட்ட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயன்படுத்தவோ அனுமதிக்கப்படமாட்டாது என்பதை உறுதிப்படுத்த ஆளும்தரப்பு ஒரு தீர்க்கமான முடிவை எடுக்கும் என்று தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மாணவர்கள் தவறிழைத்தால் அவர்களுக்குத் தண்டனை வழங்குவது பொறுத்தமற்றது. பாசத்துடன் அறிவுரை கூறி அவர்களை நல்வழிப்படுத்தவேண்டும். சுய ஒழுக்கத்தையும் கட்டுப்பாடுகளையும் அவர்களுக்குப் பழக்கப்படுத்தவேண்டும். சுய கட்டுப்பாடுடைய சமூகத்தை நாம் உருவாக்க வேண்டும்.

போதைப்பொருள் பாவனை தொடர்பிலும் மாணவர்களுக்குச் சுய ஒழுக்கம் கற்பிக்கப்பட வேண்டும். கையடக்க தொலைபேசி என்பது ஒரு விஷமாகும். அதில் குறுகிய காணொளிகள் மிக ஆபத்தானவை. பிள்ளைகளின் மூளை இயங்கும் வேகத்தை அவை கட்டுப்படுத்துகின்றன. எனவே தான் அவற்றிலிருந்து பிள்ளைகளை வேறுபடுத்துமாறு பெற்றோரிடம் வலியுறுத்துகின்றோம்.

ஆஸ்திரேலியா, சீனா போன்ற நாடுகள் சிறுவர்கள் அலைபேசி பாவிப்பதைத் தடை செய்துள்ளன. அந்த வகையில் பாடசாலை மாணவர்கள் அலைபேசி பாவிப்பதைத் தடைசெய்வதற்கு நாமும் திட்டமிட்டுள்ளோம்.

இந்தத் தடை மூலம், அதிகப்படியான திரைக் காட்சியில் இருந்தும், தீங்கு விளைவிக்கும் இணைய உள்ளடக்கத்தில் இருந்தும் பிள்ளைகளைப் பாதுகாத்து, ஆரோக்கியமான வளர்ச்சியையும் சமூகத் தொடர்பாடலையும் ஊக்குவிப்பதே ஆளும்தரப்பின் நோக்கம் என்றார்.

## காத்தான்குடி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்டுபிடிக்கப்பட்டது.

பாதிக்கப்பட்டவர் இரண்டு நாட்களுக்கு முன்னர் காணாமல் போயிருந்தார் என்று அவரது உறவினர்களால் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

அதிக அளவு ஊர்வன இருப்பதாக அறியப்படும் குளத்தில் குளித்தபோது அந்த நபர் முதலைகளால் தாக்கப்பட்டிருக்கலாம் என்று தொடக்க நிலை விசாரணைகள் தெரிவிக்கின்றன.

தலை விசாரணைகளுக்காக காத்தான்குடி மருத்துவமனைபிணவறையில் வைக்கப்பட்டுள்ளது.

# லசந்தவின் படுகொலை தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணை தேவை

## நீதியை நிலைநாட்ட சஜித் கோரிக்கை

லசந்த விக்ரமசேகரவின் கொலை தொடர்பில் பாக்கசார்பற்ற விசாரணைகளை முனடுத்து, அவரது குடும்பத்தினருக்கு உரிய நீதியை நிலை நாட்டவேண்டும். மக்கள் வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதியொருவரை இவ்வாறு படுகொலை செய்துள்ளமையானது நாட்டில் கொலை கலாசாரம் எந்தளவுக்கு வேறூன்றியுள்ளது என்பதைத் தெளிவாகக் காண்பிக்கிறது என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

வெலிகம பிரதேச சபையில் பொது மக்கள் தினத்தன்று இனந்தெரியாத துப்பாக்கிதாரிகளால் படுகொலை செய்யப்பட்ட வெலிகம பிரதேச சபையின் தலைவர் லசந்த விக்ரமசேகரவின் பூதவுடலுக்கு நேற்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச இறுதியஞ்சலி செலுத்தினார்.

அதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

லசந்த விக்ரமசேகரவின் கொலை தொடர்பில் பாக்கசார்பற்ற விசாரணைகளை முனடுத்து, அவரது குடும்பத்தினருக்கு உரிய நீதியை நிலை நாட்ட வேண்டும். லசந்த விக்ரமசேகரவின் கொலைச் சம்பவத்தை வன்மையாகக் கண்டிக்கிறோம். கொலை கலாசாரம் சமூகத்தில் தொடர்ந்தும் இடம்பெற்று வருகிறது. மக்கள் வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட, சபைக்குத் தெரிவான ஏனைய உறுப்பினர்களால் தலைவராக தெரிவு செய்யப்பட்ட ஒருவரை இவ்வாறு படுகொலை செய்வதானது நாட்டில் கொலை கலாசாரம் எந்தளவுக்கு வேறூன்றியுள்ளது என்பதை தெளிவாகக் காண்பிக்கிறது.

இன்று நாட்டில் சட்டம் ஒழுங்கு இல்லை. காட்டுச் சட்டமே நடைமுறையிலுள்ளது. இதன் காரணமாக, மக்களின் வாழ்க்கை சீரழிந்துபோயுள்ளது. இந்த கொலை கலாச்சாரத்தை நாம் இல்லாதொழிக்க வேண்டும். தற்போதைய அரசாங்கத்தின் பலவீனத்தால், சமூகம் பல்வேறு பிரிவினரின் பிடியில் சிக்கியுள்ளது. இது மக்களின் வாழும் உரிமை மீது மேற்கொள்ளப்பட்டுள்ள தாக்குதலாகும்.

மக்களின் வாழும் உரிமையை நாம் பாதுகாக்கவேண்டும். எனவே இந்தக் கொலைகாரர்களுக்கு தண்டனையைப் பெற்றுக் கொடுக்க வேண்டும். அவரது கொலை குறித்து பக்கசார்பற்ற விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும். தனக்கு உயிர் அச்சுறுத்தல் காணப்படுவதாக குறிப்பிட்டு எழுத்து மூலம் பொலிஸ்மா அதிபரிடம் அவர் பாதுகாப்பு கோரிய போதிலும், உரிய பாதுகாப்பு வழங்கப்படவில்லை. இவ்வாறு பாதுகாப்பு வழங்காமை குறித்தும் விசாரணை நடத்த வேண்டும் என்றார்.

# வலுவடைகிறது 'மொந்தா'

தென்கிழக்கு வங்காள விரிகுடாவில் நிலைகொண்டிருந்த காற்றழுத்தத் தாழ்வு நிலையானது, நேற்று மாலை 6 மணியுடனான கடந்த 6 மணித்தியாலங்களில் மணிக்கு 10 கி.மீ வேகத்தில் மேற்கு - வடமேற்கு திசையில் நகர்ந்து, வலுவடைந்து ஆழ்கடல் காற்றழுத்தத் தாழ்வு நிலையாக மாறியுள்ளது. இதற்கு மொந்தா புயல் என்று பெயரிடப்பட்டுள்ளது. இது நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 5.30 மணிக்கு அதே பிராந்தியத்தில், திருகோணமலைக்கு வடகிழக்கே சுமார் 720 கி.மீ தூரத்தில் மையம் கொண்டிருந்ததாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது மேற்கு - வடமேற்கு திசையில் நகர்ந்து, அடுத்த 24 மணித்தியாலங்களில் தென்மேற்கு மற்றும் அண்மைய மேற்கு - மத்திய வங்காள விரிகுடாவில் புயலாக மேலும் வலுவடைய வாய்ப்புள்ளதாகவும், அதன் பின்னர், இது வடமேற்கு நோக்கி நகர்ந்து நாளை செவ்வாய்கிழமைக்குள் தீவிர புயலாக வலுவடையக் கூடும் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. தொடர்ந்து வடக்கு-வடமேற்கு திசையில் நகர்ந்து நாளை ஆந்திரப் பிரதேச கடற்கரையை கடக்க வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பாதிப்புக்கள்

இந்தக் காற்றழுத்த தாழ்வு நிலையால் கடந்த 17ஆம் திகதி முதல் நாட்டின் பல மாவட்டங்களிலும் கடும் காற்றுடனான மழை பெய்து வருகிறது. இதனால் குருணாகல், புத்தளம், அநுராதபுரம், பதுளை, மொனராகலை, காலி, அம்பாந்தோட்டை, களுத்துறை, கொழும்பு, கம்பஹா, கேகாலை, இரத்தினபுரி, நுவரெலியா, கண்டி, வவுனியா, யாழ்ப்பாணம், திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு ஆகிய 18 மாவட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

இம்மாவட்டங்களில் 7944 குடும்பங்களைச் சேர்ந்த 31,623 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. மேலும் 5 வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளதோடு, 847 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. அத்தோடு 132 குடும்பங்களைச் சேர்ந்த 544 பேர் 4 பாதுகாப்பு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

### மண்சரிவு அபாய எச்சரிக்கை

கொழும்பில் சீதாவாக்கை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பிரதேசத்துக்கும், காலியில் யக்கலமுல்ல, நெலுவ, நாகொட, பத்தேகம, எல்பிட்டிய பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பிரதேசங்களுக்கும், களுத்துறையில் ஹொரண, வலல்லாவிட்ட மற்றும் இங்கிரிய பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பிரதேசங்களுக்கும், கண்டியில் உடுநுவர, தொலுவ, பஹததும்பர, பஸ்பாகே கோரள, கங்கா இஹல கோரள, பஹதஹேவாஹெட்ட, உடபலாத்த, தெல்தோட்டை, உடதும்பர மற்றும் யட்டிநுவர பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பிரதேசங்களுக்கும் விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் நடைமுறையிலுள்ளது.

அதேவேளை கேகாலையில் ருவன்வெல்ல, வரகாப்பொல, கலிகமுவ மற்றும் பலாத்கொஹூபிட்டி, யட்டியாந்தோட்டை, ரம்புக்கன, மாவனெல்ல, அரநாயக்க, கேகாலை மற்றும் தெஹியோவிட்ட பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பிரதேசங்களுக்கும், குருணாகலில் நாரம்மல, ரதீகம, அலவ்வ மற்றும் மல்லவபிட்டி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பிரதேசங்களுக்கும், மாத்தளையில் ரத்தோட்டை, அம்பன்கங்க கோரள, ஹட்டவத்த, லக்கல, பல்லேபொல, உக்குவெல மற்றும் நாவுல பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பிரதேசங்களுக்கும் விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கையும் தொடர்ந்தும் நடைமுறையிலுள்ளது.

இதேபோன்று மாத்தறையில் வெலிபிட்டி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பிரதேசங்களுக்கும், நுவரெலியாவில் அம்பகமுவ, ஹங்குராங்கெத்த, நோர்வூட் மற்றும் வலப்பனை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பிரதேசங்களுக்கும், இரத்தினபுரியில் இம்புல்பே, பெல்மடுல்ல, கிரியெல்ல, அயகம, குருவிட்ட, கலவான, இரத்தினபுரி மற்றும் எஹெலியகொட பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பிரதேசங்களுக்கும் விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கையும் தொடர்ந்தும் நடைமுறையிலிருப்பதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தான்தோன்றித்தனமான முடிவா கல்விச் சீர்திருத்தம்?

கல்வி என்பது ஒரு நாட்டின் எதிர்காலத்தையும், அதன் சமூக நெறிமுறைகளையும் வடிவமைக்கும் அடித்தள சக்தியாகும். அந்தக் கல்வி அமைப்பை மாற்றுவது என்றால் அது பாடத்திட்டங்களை மட்டுமல்ல; கோடிக்கணக்கான மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆகியோரின் அன்றாட வாழ்க்கையையும் மாற்றுகிறது. ஆகையால், கல்வி சீர்திருத்தம் என்பது எளிதான செயல் அல்ல. மிகுந்த பொறுப்புணர்வும், பரந்த ஆலோசனையும், நிலப்பரப்பின் நிதர்சனங்களைக் கவனிக்கும் பூர்வாய்வும் இத்தகைய மாற்றங்களுக்கு முன் அவசியம்.

ஆனால், இலங்கை ஆளும்தரப்பு அண்மையில் அறிவித்துள்ள 'புதியகல்விசீர்திருத்தத்திட்டம்' குறித்து சமூகத்தின் பலதரப்புகளிலும் குழப்பம், எதிர்ப்பு, சந்தேகம் ஆகியவை எழுந்துள்ளன. ஏழாம் தரம் மற்றும் அதற்கு மேற்பட்ட மாணவர்களுக்குப் பாடசாலை நேரத்தை 30 நிமிடங்கள் நீட்டிப்பது, கிரெடிட் (credit) அடிப்படையிலான மதிப்பீட்டு முறைமையை அறிமுகப்படுத்துவது, பாடங்கள் தொகுதி (module) அடிப்படையில் அமைக்கப்படுவது போன்றவை கோட்பாட்டில் நவீனமான முயற்சிகள்தான். ஆனால் அவை நடைமுறையில் எவ்வாறு அமல்படுத்தப்படப் போகின்றன என்பது குறித்து தெளிவும் திட்டமும் இல்லாதது மிகப் பெரிய குறை.

ஆசிரியர்கள், அதிபர்கள், கல்வி நிர்வாகிகள் ஆகியோரைப் போதுமான அளவில் கலந்துரையாடாமல் எடுத்த முடிவுகள் செயல்படுத்தும் நிலத்தில் தடுமாறுவது தவிர்க்க முடியாதது. "கல்வி கொள்கை கட்டளையால் அல்ல, கூட்டாண்மையால் உருவாக வேண்டும்" என்பதுதான் இதன் மையப்பொருள். ஆசிரியர் சங்கங்களும் இதே கருத்தை வலியுறுத்துகின்றன. போதுமான ஆசிரியர்கள் இல்லாத நிலை, வசதிகளின் பற்றாக்குறை, நிர்வாகச் சுமை ஆகிய பிரச்சினைகள் ஏற்கனவே பாடசாலைகளில் உள்ளது. இந்நிலையில் புதிய திட்டங்களை வளமின்றி திணிப்பது பிரச்சினைகளை மேலும் சிக்கலாக்கும் என்று அவர்கள் எச்சரிக்கின்றனர்.

அதேபோல், 50 மாணவர்களுக்கு குறைவாக உள்ள சிறிய பாடசாலைகளை இணைத்தல் அல்லது மூடுதல் பற்றிய அரசின் சிந்தனையும் பொதுமக்களிடையே பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. மலைப்பகுதிகள், வடக்கு, கிழக்கு போன்ற இடங்களில் போக்குவரத்து சிரமம் மற்றும் பள்ளி விலகல் விகிதம் அதிகமுள்ள நிலையில் இத்தகைய நடவடிக்கை அந்தக் குழந்தைகளை கல்வி அமைப்பிலிருந்து மேலும் விலக்கக்கூடும். திறன் மேம்பாட்டுக்கான நியாயமான திட்டமாக தோன்றினாலும், இது சமூக சமத்துவம் என்ற அடிப்படை நோக்கைப் பாதிக்கக்கூடியது என்பதையும் ஆளும்தரப்பு கவனிக்கவேண்டும்.

இதற்கிடையில் "கல்விச் சீர்திருத்த வரைவு" என்ற பெயரில் போலி ஆவணம் சமூக வலைதளங்களில் பரவியதோடு, கல்வி அமைச்சு அதனை மறுத்து சட்ட நடவடிக்கை எடுப்பதாக அறிவித்துள்ளது. ஆனால் இது ஒரு வேறு உண்மையை வெளிப்படுத்துகிறது — மக்கள் உண்மையான தகவலைப் பெறாதபோது பொய்த் தகவல்கள் பெருகும். கல்வி போன்ற முக்கிய துறையில் வெளிப்படைத்தன்மை மற்றும் தகவல் அணுகல் வசதி என்பது விருப்ப விஷயம் அல்ல; அவை கட்டாயம்.

ஆளும்தரப்பின் நோக்கம் நவீனத்திற்கேற்ப கல்வியை மாற்ற வேண்டும் என்றால், அது வரவேற்கத்தக்கது. நமது மாணவர்கள் சிந்திக்கவும் படைப்பாற்றலுடன் செயல்படவும் வழி வகுக்கும் கல்வி முறை அவசியம். ஆனால் அதற்கான மாற்றங்கள் உடனடி உத்தரவுகளாக அல்ல, ஒத்துழைப்பு மற்றும் புரிதலின் அடிப்படையில் அமைய வேண்டும். ஆசிரியர்களின் பயிற்சி, பாடத்திட்டத் தயாரிப்பு, மதிப்பீட்டு முறை, நிர்வாகக் கருவிகள், போக்குவரத்து வசதி போன்ற அடிப்படை அம்சங்கள் அனைத்தும் முன்கூட்டியே உறுதிப்படுத்தப்படவேண்டும்.

இன்றைய நிலமையில், கல்வி அமைச்சும் ஆசிரியர் சங்கங்களும் ஒன்றோடொன்று மோதும் பாதையில் செல்வதைவிட, உரையாடல் மேசையில் அமர வேண்டும். நம்பகத்தன்மை, வெளிப்படைத்தன்மை மற்றும் பரஸ்பர மரியாதை அடிப்படையில் செயல்பட்டால் சீர்திருத்தம் ஒரு சண்டையல்ல, ஒரு முன்னேற்றப் பயணமாக மாறும்.

கல்வி என்பது எதிர்கால தலைமுறையைக் கைக்கொடுக்கின்ற துறை. ஆகையால், அதனை மாற்றுவது அரசின் ஒருதலைப்பட்ச முடிவாக இருக்கக் கூடாது; அது ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள், கல்வியாளர்கள் ஆகியோர் பங்கெடுக்கும் தேசிய முயற்சியாக இருக்க வேண்டும். ஆலோசனை இல்லாத சீர்திருத்தம் என்பது கல்வியை முன்னேற்றுவதற்கான முயற்சி அல்ல — அது கல்வியின் அடித்தளத்தையே குலைக்கும் முயற்சி.

# இந்தியாவிற்கான கப்பல் சேவை காலநிலை மாற்றத்தால் நிறுத்தம்

இந்தியாவின் தமிழ்நாட்டில் உள்ள நாகப்பட்டினத்திற்கும், காங்கேசன்துறைக்கும் இடையிலான பயணிகள் படகுச் சேவை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

கடற்பகுதியில் நிலவும் மோசமான வானிலை காரணமாகவே நேற்று ஞாயிற்றுக்கிழமை முதல் சேவை இடைநிறுத்தப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

படகுச் சேவை வழங்குநர் நிறுவனம், மோசமான வானிலை முன்னறிவிப்பைக் காரணம் காட்டி, நேற்றுமுதல் நாளை செவ்வாய்கிழமை வரையிலான பயணங்கள் நிறுத்தப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளது.

வருடாந்த சேவை இடைநிறுத்தம் நவம்பரில் தொடங்குவதற்கு முன்னர், ஒக்டோபர் 28 வரை சேவையை இயக்க அந்த நிறுவனம் திட்டமிட்டிருந்தது.

# தெற்குக் கடலில் ஆபத்தில் சிக்கிய வணிக கப்பலிலிருந்து 14 பேர் மீட்பு

தெற்குக் கடலில் முக்கிய இயந்திரங்கள் செயலிழந்து, ஆபத்தில் சிக்கிய எம்.வி. இன்டர்கிரிடி ஸ்டார் என்ற வணிகக் கப்பலின் பணியாளர்களை இலங்கை கடற்படை வெற்றிகரமாக மீட்டுள்ளது.

இலங்கைக்கு தெற்கே சுமார் 100 கடல் மைல் தொலைவில் ஆழ்கடலில் அதன் முக்கிய இயந்திரங்கள் செயலிழந்ததால், பேரிடரிலும் உயிருக்கு ஆபத்திலும் இருந்த குறித்த வணிகக் கப்பலின் பணியாளர்கள், கடற்படையினரால் மீட்கப்பட்டு நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

கப்பலின் முக்கிய இயந்திரங்கள் செயலிழந்து, ஆபத்தில் இருப்பதாக கடற்படைத் தலைமையகத்தில் உள்ள கொழும்பு கடல்சார் தேடல் மற்றும் மீட்பு ஒருங்கிணைப்பு மையத்திற்கு கிடைத்த அறிவிப்பிற்கமைய, கடற்படையினர், பாதுகாப்பு அமைச்சின் அறிவுறுத்தலுக்கமைய அந்தக் கடல் பகுதியில் தேடல் மற்றும் மீட்பு நடவடிக்கைக்காக இலங்கை கடற்படைக் கப்பலான ஐ.என்.எஸ். சமுதுரவை அனுப்பியது.

ஆபத்தில் சிக்கிய கப்பலில் இருந்த இந்திய, துருக்கிய மற்றும் அஜர்பைஜான் நாடுகளின் 14 பணியாளர்கள், சமுதுர கப்பலால் பாதுகாப்பாக மீட்கப்பட்டதன் பின் மேலதிக நடவடிக்கைகளுக்காக அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு அழைத்து வரப்பட்டனர்.

மேலும், கொழும்பில் உள்ள கடல்சார் தேடல் மற்றும் மீட்பு ஒருங்கிணைப்பு மையத்தின் ஒருங்கிணைப்பின் கீழ், பாதிக்கப்பட்ட வணிகக் கப்பலுக்கு உதவுவதற்காக எம்.வி. மோர்னிங் க்ளோரி என்ற வணிகக் கப்பல் கடல் பகுதியில் தயார் நிலையில் இருந்ததுடன், இதன் மூலம் கடல்சார் ஆபத்து ஏற்பட்டால் உதவி வழங்குவதற்கான உறுதிப்பாட்டை பிரதிபலிப்பதாக கடற்படை ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

# வாகனங்களின் விலை குறைவு வாங்க இதுவே சரியான நேரம்

நிதிக் கொள்கைகள் மற்றும் சந்தை நிலவரங்கள் காரணமாக இலங்கையில் வாகனங்களின் விலை கணிசமாகக் குறைந்துள்ளதால், வாகனங்களை வாங்குபவர்களுக்கு இதுவே சிறந்த நேரம் என்று இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் உப தலைவர் அரோஷ ரொட்ரிகோ, தெரிவித்தார்.

வரி மாற்றங்கள் இல்லாவிட்டாலும், இலங்கையில் பதிவு செய்யப்பட்ட மற்றும் பதிவு செய்யப்படாத வாகனங்களின் விலைகள் வீழ்ச்சியடைந்துள்ளன.

ஜப்பானிய ஏலச் சந்தைகளில் இலங்கைக்குத் தேவையான வாகனங்கள் அதிக அளவில் நிரம்பல் செய்யப்படுவதால், ஏல விலைகள் கணிசமாகக் குறைந்துள்ளன.

அத்துடன், உள்ளூர் இறக்குமதியாளர்களும் அதிக எண்ணிக்கையிலான வாகனங்களைக் கொண்டு வந்துள்ளதால், சந்தையில் தேவைக்கு அதிகமாக வாகனங்களின் இருப்புக் குவிந்துள்ளது.

இதன் காரணமாக, பொதுவாக ஒவ்வொரு வாகனத்தின் விலையும் 10 இலட்சம் ரூபா முதல் 15 இலட்சம் ரூபா வரையில் குறைவடைந்துள்ளது.

குறிப்பாக, இறக்குமதியாளர்கள் வங்கிக் கடன்களை அடைப்பதற்காகவும், இருப்புகளைக் குறைப்பதற்காகவும் சிலர் நஷ்டத்திற்குக்கூட வாகனங்களை விற்கிறார்கள். எனவே, இது வாகனங்களை வாங்குபவர்களுக்குச் சிறந்த நேரமாக உள்ளது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

வரவிருக்கும் பாதீட்டில், பேருந்துகள் மற்றும் பாரவூர்திகளின் இறக்குமதி வரிகளைக் குறைக்க வேண்டும் எனவும் சங்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தற்போது மூன்று ஆண்டுகளுக்குட்பட்ட வாகனங்களை மட்டுமே இறக்குமதி செய்ய அனுமதிக்கப்படுவது, நான்கு அல்லது ஐந்து ஆண்டுகளுக்குட்பட்ட வாகனங்களை இறக்குமதி செய்ய அனுமதிக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் தங்களது சங்கம் முன்வைப்பதாக அவர் குறிப்பிட்டார்.

வாடிக்கையாளர்கள் பொறுப்புள்ள நிறுவனங்களிடமிருந்து உத்தரவாதத்துடன் வாகனங்களை வாங்க வேண்டும் என்றும், இறக்குமதியாளர்கள் சங்கத்தில் உள்ளவர்கள் ஏலத் தாள் (புற்உமிஷ்லிஜ ரீஜூளளமி) மற்றும் ஏல விபரங்களை வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதாகவும் அரோஷ ரொட்ரிகோ

# சவூதி நாட்டவர் கைது

*ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் விமானத்தில் இரண்டு விமானப் பணிப்பெண்களைத் தாக்கிய சம்பவம் தொடர்பாக, சவுதி அரேபிய நாட்டவர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.*

*சவுதி அரேபியாவின் ரியாத்தில் இருந்து கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு பயணித்துக் கொண்டிருந்த ஷீஸி 266 விமானத்தில் பயணித்த பயணி ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார் என்று விமான நிலைய பொலிஸார் தெரிவித்தனர்.*

*விமானம் கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறங்கத் தயாரானபோது, அனைத்துப் பயணிகளும் ஆசனப் பட்டிகளை அணிந்து தங்கள் இருக்கையில் அமருமாறு அறிவிக்கப்பட்டபோதும், அதனை மீறி குறித்த பயணி கழிப்பறைக்குச் செல்ல முயன்றதால், அங்கு முறுகல் ஏற்பட்டது.*

*பின்னர் பணிப்பெண்கள் இது தொடர்பாக விமானிக்கு தகவல் தெரிவிக்க நடவடிக்கை எடுத்தனர்.*

*விமானம் கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறங்கிய பிறகு, பொலிஸ் அதிகாரிகள் சந்தேகநபரான சவுதி அரேபிய நாட்டவரைக் கைது செய்தனர்.*

*மலேசியாவுக்குச் செல்லும் நோக்கில் கட்டுநாயக்க விமான நிலையம் வழியாக வந்த 28 வயதான குறித்த சவுதி அரேபிய நாட்டவர், நாளை நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளார்.*

காலைக்கதிர் Kalaikkathir

வரலாறு படைக்கும் ஜப்பானின் முதல் பெண் பிரதமர் சனே டகாய்ச்சி, முன்னாள் பிரிட்டிஷ் பிரதமர் மார்கரெட் தாட்சரின் அபிமானி ஆவார். அறுபத்தி நான்கு வயதான பழமைவாதத் தலைவரான சனே டகாய்ச்சி, ஜப்பானின் ‘இரும்புப் பெண்மணி‘ என்று அழைக்கப்படுகிறார்.

ஜப்பானில் முன்னைய ஷிகெரு இஷிபா தலைமையிலான லிபரல் ஜனநாயகக் கட்சி நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் சமீபத்தில் பெரும்பான்மையை இழந்தது. இதனைத் தொடர்ந்து பிரதமர் ஷிகெரு கடந்த மாதம் தனது பதவியை ராஜினாமா செய்தார்.

அதைத் தொடர்ந்து, உட்கட்சியில் வாக்கெடுப்பு நடந்தது. இதன் விளைவாக லிபரல் ஜனநாயக கட்சியின் புதிய தலைவராக அந்நாட்டின் முன்னாள் அமைச்சர் சனே டகாய்ச்சி (ரீழிஜழிளவீழிவழிஷ்உஜ¯ஷ்) தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளார். சனே டகாய்ச்சி லிபரல் ஜனநாயகக் கட்சியின் தலைவரும் ஆவார்.

ஜப்பானில் லிப்ரல் ஜனநாயக கட்சி என்பது மிகவும் பழமைவாத கட்சி ஆகும். இப்படிப்பட்ட கட்சிக்குள் இருந்து பெண் ஒருவர் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது வரலாற்று சாதனையாக பார்க்கப்படுகிறது. இந்த வெற்றிக்குப் பிறகு செய்தியாளர்களை சந்தித்த சனே, இது ஒரு புதிய சகாப்தம் என்று கூறியிருந்தார்.





## சனே டகாய்ச்சி:

# சூரியன் முதலில் உதிக்கும் நாட்டின் முதல் பெண் பிரதமர்

ஐங்கரன் விக்கினேஸ்வரா



### லிபரல் கட்சியின் தொடர் தோல்வி:

கடந்த ஆண்டு நாடாளுமன்ற தேர்தலில் தொடர்ச்சியாக தோல்விகளை லிபரல் ஜனநாயக கட்சி சந்தித்திருந்தது. இக்கட்சியின் தாராளமயக் கொள்கை தற்போது ஜப்பானில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடிக்கு காரணமாக விமர்சிக்கப்பட்டு வருகிறது.

சனே டகாய்ச்சி பிரதமராக இது அவரது மூன்றாவது முயற்சியாகும். அவரது கட்சியான ஸிம்ஊே ஐந்து ஆண்டுகளில் நான்கு பிரதமர்களைக் கண்டுள்ளது. இவர் ஸிம்ஊே இன் கடும்போக்கு பிரிவைச் சேர்ந்தவராவார். மறைந்த முன்னாள் பிரதமர் ஷின்சோ அபேயின் ஆதரவாளராக இருந்து உள்ளார்.

தற்போது பதவிக்கு வரும் அவருக்கு, டிரம்ப் விதித்த வரியும் ஜப்பானை நெருக்கடியில் தள்ளியிருக்கிறது. இதையெல்லாம் சனே எப்படி எதிர்கொள்ளப்போகிறார் என்பதே தற்போதைய கேள்வியாக இருக்கிறது.




### ஜப்பானிய அரசியலில் புரட்சி:

ஜப்பானிய அரசியலில் ஒரு புதிய புரட்சியாக கருதப்படுகிறது. அவர் கட்சித்தலைவராக பதவியேற்றதைத் தொடர்ந்து ஜப்பான் நாட்டின் பிரதமராக தேர்வு ஆவதற்கான வாக்கெடுப்பு, அந்நாட்டு நாடாளுமன்ற கீழவையில் நடைபெற்றது.

அந்த வாக்கெடுப்பில், மொத்தம் உள்ள 465 ஓட்டுகளில், 237 ஓட்டுகளை பெற்று, சனே டகாய்ச்சி வெற்றி பெற்றார். இதைத் தொடர்ந்து, மேலவையில் நடைபெறும் வாக்கெடுப்பிலும் அவர் வெற்றி பெற்றார். இதன் மூலம் ஜப்பானின் புதிய பிரதமராக அவர் பதவியேற்றுக் கொண்டுள்ளார்.

இதன் மூலம் ஜப்பான் நாட்டின் 104வது பிரதமராக ஒரு பெண் பதவியை வகிக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. அந்நாட்டு நாடாளுமன்றத்தில் நடந்த வாக்கெடுப்பில் பெரும்பான்மையை பெற்று, டகாய்ச்சி புதிய வரலாறு படைத்துள்ளார்.

ஜப்பான் வரலாற்றிலேயே, முதல் பெண் பிரதமர் என்ற பெருமையையும் சனே டகாய்ச்சி பெற்றுள்ளார். வலிமையான பெண்ணாக அறியப்படும் சனே டகாய்ச்சி, ஜப்பானின் பொருளாதாரத்தை வலுப்படுத்தி, எதிர்கால சந்ததியினருக்கு வளமான ஜப்பானை மறுவடிவமைத்து கொடுக்கப்போவதாக உறுதியளித்துள்ளார்.

### சூரியன் முதலில் உதிக்கும் நாடு:

ஜப்பானை ‘சூரியன் முதலில் உதிக்கும் நாடு‘ என்றும் அழைக்கப்படுகிறது. கடின வேலை மீதான



ஆர்வம், வாழ்வியல் தத்துவம் (இக்கிகை), மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கை முறை போன்றவற்றுக்குப் ஜப்பானிய மக்கள் பெயர் பெற்றவர்கள்.

ஜப்பானியர்கள் புதுமைகளுக்கும், புதிய கண்டுபிடிப்புகளுக்கும் பெயர் பெற்றவர்கள். சிலர் தனிமையை தேர்ந்தெடுத்து வாழும் பழக்கத்தையும் கொண்டுள்ளனர்.

ஜப்பானியர்கள் தம் பணியின் மீது மிகுந்த ஆர்வம் காட்டுபவர்கள். மேலும், ‘இக்கிகை‘ (ஷ்வஷ்ஆழிஷ்) என்ற வாழ்வியல் தத்துவத்தை பின்பற்றி நீண்ட மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கையை வாழ்கிறார்கள்.

அவர்கள் வயிறு நிரம்ப சாப்பிடுவதைத் தவிர்ப்பது போன்ற சில ஆரோக்கியமான வாழ்க்கை முறை பழக்க வழக்கங்களையும் கொண்டுள்ளனர்.

### நெருக்கடியிலிருந்து தப்புமா ஜப்பான்?

புதிய பிரதமர் பெண்களின் உடல்நலப் போராட்டங்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த விரும்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அமெரிக்காவின் டிரம்ப் அரசுடனான வர்த்தக ஒப்பந்தம் இன்னும் இறுதி செய்யப்படாமல் உள்ளது. அந்த சவாலை டகாய்ச்சி எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலை தற்போது ஏற்பட்டுள்ளது.

மேலும், ரஷ்யாவிடமிருந்து எரிசக்தி இறக்குமதியை ஜப்பான் நிறுத்த வேண்டும் என்றும், ராணுவத்திற்கான செலவை அதிகரிக்க வேண்டும் என்றும் ட்ரம்ப் கூறி வருகிறார். அது குறித்தும் ஒரு திடமான முடிவை டகாய்ச்சி எடுக்க வேண்டியிருக்கிறது. இவ்வாறான உலகளாவிய சவால்களை புதிய பெண் பிரதமர் வெற்றிகரமாக சமாளித்து விடுவார் என்றே ஜப்பானிய மக்கள் திடமாக நம்புகிறார்கள்.

மேலும் மந்தமான பொருளாதாரத்தை எதிர்த்துப் போராடுவது, பாழடைந்த அமெரிக்க-ஜப்பான் உறவை வழிநடத்துவது மற்றும் ஊழல்கள் மற்றும் உள் மோதல்களால் உலுக்கிய ஆளும் கட்சியை ஒன்றிணைப்பது ஆகியவை அவரது பல சவால்களில் அடங்கும்.

### உலகில் பெண் பிரதமர்கள்:

உலகளாவிய ரீதியில் அரசியலில் அதிக அளவில் பெண்கள் தற்போது ஆர்வம் காட்டி வருகின்றனர். அரசியல் மூலமாக ஒரு நாட்டை ஆளும் வல்லமையை அடைந்துள்ளனர். உலக அளவில் அதிக காலம் பதவியில் உள்ள பெண் தலைவராக கடந்த ஆண்டு வங்கதேசத்தில் பதவியில் இருந்து நீக்கப்பட்ட ஷேக் ஹசீனா என ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

வங்காளதேசத்தின் பிரதமருமான ஷேக் ஹசீனா 1996 முதல் 2001 வரை பிரதமராக பதவி வகித்தார். பின்னர் 2008-ம் ஆண்டு தேர்தலில் வெற்றி பெற்று மீண்டும் பிரதமரானார். 2008 முதல் 2024 ஜனவரியில் நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்று தொடர்ச்சியாக மூன்றாவது முறையாக பிரதமர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஆனால் 2024 ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற மக்கள் போராட்டம் காரணமாக அவர் பதவியை விட்டு நீக்கப்பட்டார். இதையடுத்து அவர் இந்தியாவில் தஞ்சம் புகுந்தார். இதன் மூலம் ஷேக் ஹசீனா 16 ஆண்டுகளாக அதிக காலம் பதவி வகித்து வந்த உலகின் முதல் பெண் தலைவர் என்ற பெருமையை அடைந்துள்ளார்.

இதற்கு முன்னதாக இந்தியாவின் முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி 15 ஆண்டுகளும், ஜெர்மனி பிரதமர் ஏஞ்சலா மெர்க்கெல் 14 ஆண்டுகளும், இங்கிலாந்து முன்னாள் பிரதமர் மார்கரட் தாட்சர் 11 ஆண்டுகளாக அதிக காலம் பதவி வகித்த பெண் தலைவர்கள் என்ற பெருமையை பெற்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

உலகின் பல நாடுகளில் பெண்கள் தலைமைப் பதவிகளை வகித்து வந்திருக்கின்றனர். ஆனால் தற்போது ஜப்பானில் பெண் ஒருவர் தலைமை பதவியை வகிக்கிறார். ஆயினும் ஜப்பான் தற்போது கடுமையான பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடியில் சிக்கியிருக்கிறது. இந்நிலையில், அந்நாட்டின் முதல் பெண் பிரதமராக சனே டகாய்ச்சி தேர்வாகியிருக்கிறார். இவர் நாட்டை நெருக்கடியிலிருந்து மீட்பாரா? என்று எதிர்பார்ப்பு எழுந்திருக்கிறது.









Mon-Sat
Hp World - 077 359 4363 | Jaffna - 077 766 7975 | Exclusive - 076 359 4359
Mannar - 076 359 4368 | Kilinochchi - 076 359 7610


புதிய கல்வியாண்டு
2025
zoom
76667-4945
LEARN EASY
KNOWLEDGE IS POWER
January 25
FREE
February 5
தரம் 6
தொடக்கம்
தரம் 11
வரை
தமிழ் English
கணிதம் விஞ்ஞானம்
வரலாறு சிங்களம்
கணக்கீடு
English Literature
ICT


வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்
மருதம் பசுமை நகர்
Marutham Green City
நல்லூர் ஆலயம் 9km
கச்சேரி 8km
யாழ் பேருந்து நிலையம் 11km
யாழ் புகையிரதநிலையம் 10km
வடக்கு மாகாணசபை 9km
உள்ளக வசதிகள்
நூலகம்
நீச்சல் தடாகம்
உணவகம்
சிறுவர் பூங்கா
விளையாட்டுத்திடல்
மீன்பிடி குளம்
A - 2 பரப்பு மேட்டுக்காணியுடன்
2 பரப்பு வயல்க்காணி
B - 2 பரப்பு மேட்டுக்காணியும்
2 பரப்பு வயல்க்காணியும் (தனிதனியாக)
C - 2 பரப்பு மேட்டுக்காணி
பிரதான வீதியுடன்
0777 43 55 57

காலைக்கதிர் Kalaikkathir


# உங்கள் கனவை நனவாக்க ...!

## NVQ Level 3 & 4 Courses

புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025

கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு



- CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
- NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)

கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன்
3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்

தகுதி:
- வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
- ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
- GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி

JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY

46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722

# JRIDE



இலங்கையின் பயணிகள் செயலி
SRI LANKA'S
TAXI APP FROM JAFFNA



5%

இப்போது நாம்
இலங்கை முழுவதும்

காத்திருப்புக்கு விடுதலை!

www.jride.lk

மகிழ்ச்சியான பாதுகாப்பான பயணம் திருப்தியான கட்டணம்!


இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.10.2025இல் வெளியிடப்பெற்றது